செய்தி வெளியீடு எண்.51-2016 நாள்: 23.11.2016

**விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் ஒருங்கிணைந்த வளர்ச்சி, மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின்கீழ் அரசு மானியத்தில் மீன்வளர்ப்பு மேற்கொள்ள மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்/ விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.**

****

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின்கீழ் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் நன்னீர் மீன்வளர்ப்பு/ உவர்நீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

1. **புதிய மீன் பண்ணைக் குளங்கள்/ குட்டைகள் அமைத்தல்:** ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பு குளம் அமைத்திட ஆகும் செலவினத் தொகை ரூ.7.00 இலட்சத்தில் 50 விழுக்காடு ரூ.3.50 இலட்சம் மானியத் தொகை ஒரு ஹெக்டருக்கு வழங்கப்படும்.
2. **ஏற்கனவே உள்ள மீன்வளர்ப்பு குளங்கள்/ தொட்டிகளை சீராமைத்தல்/ புதுப்பித்தல்:** ஒரு ஹெக்டேருக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.3.50 இலட்சத்தில் 50% மானியம் ரூ.1.75 இலட்சம் வழங்கப்படும்.
3. **நன்னீர் மீன்வளர்ப்பு இடுப்பொருள் செலவினம்:** ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு ஆகும் செலவினத்தொகை ரூ.1.50 இலட்சத்தில் 50% மானியம் ரூ.0.75 இலட்சம் வழங்கப்படும்.
4. **உவர்நீர் இறால் வளர்ப்பு இடுப்பொருள் செலவினம்:** ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு ஆகும் செலவினத்தொகை ரூ.3.00 இலட்சத்தில் 50% மானியம் ரூ.1.50 இலட்சம் வழங்கப்படும். விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து அதிகம் பெறப்படின், முன்னுரிமை மற்றும் தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். விருப்பமுள்ளவர்கள்/ விவசாயிகள் இந்த விளம்பரம் வெளிவந்த 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம், எண்.10, முதல் தளம், நித்தியானந்தம் நகர், வழுதரெட்டி, விழுப்புரம் - 605 401 தொலைபேசி எண்.04146-259329 என்ற முகவரியை, அலுவலக வேலை நாட்களில் நேரில் தொடர்பு கொண்டு உரிய விவரம் பெற்று பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.